**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 22-ம் நாள் புதன்கிழமை

**CC.No. 128/2022**

**C.N.R.No: TNDG18-002399-2022**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Athoor. |
| 2. | Name of the Judge | Thiru. S. Anbuthasan, B.Com., B.L. |
| 3 | Date of Judgment | 22.07.2026 |
| 4. | Case Number along with CNR Number | **CC.No. 128/2022**<br>**C.N.R.No: TNDG18-002399-2022** |
| 5. | Name of the Parties of the case | Sub Inspector of Police, Chinnalapatti PS- Complainant<br>Accused – 1. Rajamani<br>2. Ponraj (Kapparsing) |
| 6. | Date of Occurence | 24.08.2020 |
| 7. | Date of Complaint | 25.08.2020 |
| 8. | Date of Arrest if any and remand | A1 & A2 - 25.08.2020 |
| 9. | Period of Remand of the Accused | - |
| 10. | Date if release on bail | Bailed by Police |
| 11. | Date of Final Report | 26.08.2020 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | - |
| 13. | Date of Questioning of the accused U/s. 240 of Code of Criminal Procedure | 21.07.2025 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the witnesses | Witnesses / Chief / Cross<br>PW 1 / 08.07.2026 / --<br>PW 2 / 08.07.2026 / -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW 3 | 15.07.2026 | -- |
| | | PW 4 | 17.07.2026 | -- |
| | | PW 5 | 17.07.2026 | 17.07.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code | 311 Crpc petition is filed and allowed<br>320 Crpc petition is filed and dismissed | | |
| 16. | Date of Examination of the Accused U/s. 313 of the Code | 21.07.2025 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of Stay by Superior courts and the results there of | -- | | |
| 19. | Date of Commencement of Trial | 21.07.2025 | | |
| 20. | Date of Closure of Trial | 22.07.2026 | | |
| 21. | Date of Sentence of Order | 22.07.2026 | | |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | Does not arise | | |
| 23. | If any delay, give Explanation | -- | | |

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
சின்னாளபட்டி காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 827/2020 .... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. ராஜாமணி (55/2020)
த/பெ. மாயாண்டிதேவர்
சோமசுந்தரம் காலனி,
பூஞ்சோலை சாலை,
சின்னாளபட்டி.

2. பொன்ராஜ்(காப்பர்சிங்)(55/2020)
த/பெ.பூச்சித்தேவர்,
சோமசுந்தரம் காலனி,
பூஞ்சோலை சாலை,
சின்னாளபட்டி. ..... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 13.10.2022 அன்று CC.No.128/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 22.07.2026–ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகிய நிலையில், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் சீரிய மேற்பார்வையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு, இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

## <u>தீர்ப்புரை</u>

**1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :**

i) கடந்த 24.08.2020 இரவு சுமார் 7.30 மணியளவில் வாதியின் கணவர் திண்டுக்கல் சென்றிருந்த சமயத்தில், வாதியின் வீட்டிற்கு முன்னால் வந்த எதிரிகள் குடிபோதையில் "ஏண்டி தேவிடியா மகளே! ஒழுங்க தாங்க கேக்குற காசகுடு! இது நடக்கலனா இங்கேயே உன்ன கொன்னு புதச்சுடுவோம்! என்று அசிங்கமாகப் பேசி கத்திக் கொண்டே வீட்டின் மெயின் கேட்டைத் திறந்து அத்து மீறி உள்ளே நுழைந்துள்ளனர். வாதி முன் பக்க க்ரில் கதவைச் சாத்திவிட்டு கூச்சலிடவும், 3வது சாட்சியான மதன்மோகன் மற்றும் 4வது சாட்சியான ராஜா ஆகியோர் சத்தம் கேட்டு ஓடி வரவும், எதிரிகள், குடிபோதையில் "தேவிடியா மகளே! சத்தம் போட்டு ஆளயா கூப்பிடுற, உன்ன இங்கேயே கழுத்த அறுத்து கொன்னு புதைக்கிறேனா இல்லையானு பாரு! என மிரட்டல்

விடுத்தபடியே, இவனுக எல்லாம் எங்களுக்கு ஒரு ஆளா எனக் கூறிக் கொண்டே கையிலிருந்த கட்டையை வாதி மீது கொலை வெறியுடன் தூக்கி எறிய கட்டை வீட்டு கேட்டில் பட்டு கீழே விழுந்துள்ளது. அப்போது அருகிலிருந்த மதன்மோகன் மற்றும் ராஜா ஆகியோர், ஏன் இப்படி இரவு நேரத்தில் ஒரு பெண் என்றும் பார்க்காமல் தகராறு செய்கிறீர்கள்? என்று கேட்டதற்கு "போடா தேவிடியா மகனே! மரியாதையா இடத்தை காலி பண்ணு, இல்லனா இவளோட சேர்த்து உங்களையும் கொன்னு போட்டுவோம். எங்க மேலே ஏற்கனவே பல கொலை கேசு இருக்கு, நீங்க இடத்த காலி பண்ணலைனா கையில் துப்பாக்கி வச்சிருக்கோம். இவளோட சேர்த்து உங்களையும் சுட்டு கொன்னுட்டு போயிட்டே இருப்போம். எந்த போலீசும் எங்கள ஒன்னும் புடுங்க முடியாது. இவனுக குடும்பத்துக்கு சப்போர்ட்டா எவன் வந்தாலும் சரி சாவு நிச்சயம்" என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச சட்டப்பிரிவுகள் 448, 294(b), 506(1) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சின்னாளபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது சட்டப்பிரிவு **173(2) குவிமுச–** வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ii) மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 13.10.2022 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சட்டபிரிவு 207 குவிமுச வின் கீழ் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

iii) குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும் காலமும் வழங்கப்பட்டு, இவ்வழக்கின் 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 448, 506(1) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து சட்டப்பிரிவு 240(2) குவிமுச–வின் கீழ் மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு விளக்கி வினவியபோது குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தார்.

iv) அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறிப்பிடப்பட்டன. அ.சா.1 புகார்மனு கொடுத்தவர் ஆவார். இவ்வழக்கில் 5 முதல் 9 வரையிலான மற்ற பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களால் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 9 திருமதி.முத்தமிழ்செல்வி அவர்கள் பணிமாறுதலாகி வேறு காவல் நிலையம் சென்றுவிட்டதால், குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.5 திரு.நீலமேகம், சின்னாளபட்டி சார்பு ஆய்வாளர் என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். குவிமுச பிரிவு 320 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

**(2) <u>அரசுத் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>**

i) அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகள் தங்களை அத்துமீறி நுழைந்து ஆபாசமாக பேசவில்லை, கொலை மிரட்டல்

விடுக்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும், எதிரிகள் தங்களை அத்துமீறி நுழைந்து ஆபாசமாக பேசவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது" என சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகள் தனது ஊரைச் சேர்ந்தவர்கள். என்ன சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று தனக்கு தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது" என சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.4 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "எதிரிகளை தனக்கு தெரியாது எதிரிகள் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை. தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை" என சாட்சியம் அளித்துள்ளார்.

v) கூடுதல் சாட்சியான அ.சா.5 சின்னாளபட்டி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.நீலமேகம் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜரானவரை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்தபோது, சார்பு ஆய்வாளர் திருமதி. முத்தமிழ்செல்வி என்பவர் கடந்த 25.08.2020 அன்று நிலையப் பணியில் இருந்த போது, காவல்நிலைய குற்ற எண்.827/2020, எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 448, 294(b), 506(1)–ன் கீழ் வழக்கு பதிவு செய்து பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்து

பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்பு புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

v) அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக உள்ள மேற்படி குற்றத்திற்கு உட்படுத்தக்கூடிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சங்கதிகள் குறித்து 313(1)(b) கு.வி.மு.ச பிரிவின் கீழ் விளக்கி வினவியபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பொய்வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது குற்றம்சாட்டப்பட்டவர்கள் தனது தரப்பில் சாட்சிகள் இல்லையென்று கூறினார். எனவே குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் இல்லையென்று குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மேலொப்பம் செய்யப்பட்டதன் பேரில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டது.

vi) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்?

குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?" என்பதேயாகும்.

**3) <u>தீர்வு</u>**

i. மேற்கூறிய வழக்குகளை ஆராய்ந்து பார்க்கும்போது அ.சா.ஆ.2

புகார் மனுவைச் (First Information) சார்ந்தே அ.சா.ஆ.3 அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை (Printed First Information Report) எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 448, 294(b), 506(1) என பதிவு செய்யப்பட்டு, இறுதியறிக்கை இதச சட்டப்பிரிவுகள் 448, 294(b), 506(1) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, முதல் தகவல் அறிக்கையிலிருந்து இறுதி அறிக்கை முரண்பட்டு அமையவில்லை என தெரிய வருகிறது.

ii. இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 தமது நீதிமன்ற சாட்சியமான முதல் விசாரணையில் **"ஆஜர் எதிரிகள் தங்களை அத்துமீறி நுழைந்து ஆபாசமாக பேசவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை"** என்றும் சாட்சியளித்துள்ள நிலையில் அ.சா.1 மற்றம் அ.சா.2–ன் சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதத்தில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iii. இவ்வழக்கின் சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியமான முதல் விசாரணையில் **"ஆஜர் எதிரிகள் தனது ஊரைச் சேர்ந்தவர்கள். என்ன சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று தனக்கு தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது"** என்றும் சாட்சியளித்துள்ள நிலையில் அ.சா.3ன் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதத்தில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iv. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியமான முதல் விசாரணையில் **"எதிரிகளை தனக்கு தெரியாது எதிரிகள் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை. தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை"** என்றும் சாட்சியளித்துள்ள நிலையில் அ.சா.4ன் சாட்சியம்

அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதத்தில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

v. இவ்வழக்கின் பிரதான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் கூடுதல் சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளது ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே என்றும், அவர் இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லை என்பதாலும், அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்ததை மட்டும் வைத்து இவ்வழக்கில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

vi) **முடிவாக**, புகார்தாரர் அ.சா.1 அரசு தரப்பு வழக்கிலிருந்து முரண்பட்டு தனது நீதிமன்ற சாட்சியத்தில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளதாலும், அரசுத் தரப்பு சாட்சி இக்குற்றச்சாட்டுக்களின் சட்ட உட்கூறுகளுக்கு உட்பட்டு நீதிமன்ற சாட்சியம் அளிக்காததாலும் கூடுதல் சாட்சியான அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட அலுவல் சாட்சி இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லையென்றும், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளித்திருப்பதால், கூடுதல் சாட்சியான அ.சா.5 சாட்சியம் அளித்ததை மட்டுமே வைத்து இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும், முடிவாக, இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, இவ்வழக்கிலிருந்து குற்றம்

சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

vii) இறுதியாக, 1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் **மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்களை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து** இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

viii) இவ்வழக்கில் காயமுற்ற நபரான அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால், பிரிவு 357–A(1) குவிமுசவின் படி இவ்வழக்கில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவிற்கு இழப்பீட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 22 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.09.02 16:17:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>**அரசுத் தரப்புச் சாட்சிகள்**</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராஜலட்சுமி (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. காசிராஜன்(பட்டியல் சாட்சி) |
| அ.சா.3 | திரு.மதன்மோகன்(கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. ராஜா (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.5 | திரு. நீலமேகம்(கூடுதல் சாட்சி –1) |

**Judicial Form No : 68**

| Sl.No. | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனுவில் உள்ள கையொப்பம் | 08.07.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | புகார் மனு | 17.07.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 17.07.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4. | மாதிரிவரைபடம் | 17.07.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5. | பார்வைமகஜர் | 17.07.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள் –**

இல்லை

**குற்றம் சாட்டப்பட்டவர்கள்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள் –**

இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.09.02 16:17:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

**குறிப்பு:–**

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.